[2022 மார்ச் 21

29—

புதிய குடியிருப்புகள்

***5310—திரு. R.D. சேகர்:**

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பூர் தொகுதியில் பழுதடைந்துள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளை அகற்றி, புதிய குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னை மாவட்டம், பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியில் 6 திட்டப் பகுதிகளில் 3,258 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இவற்றுள் வியாசர்பாடி DD Block–ல் 468 குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் முடிவுற்று, பயனாளிகளுக்கு விரைவில் வழங்கப்படவுள்ளன. எம்.ஜி.ஆர். நகரில் 288 குடியிருப்புகள் மற்றும் வியாசர்பாடி பழைய Block–ல் 192 குடியிருப்புகளில் கட்டுமானம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், மகாகவி பாரதி நகர், வியாசர்பாடி பழைய Block, மல்லிகைப்பூ காலனி ஆகிய திட்டப் பகுதிகளில் 1,044 குடியிருப்புகளுக்கான பழுது நீக்கும் பணிகளுக்கு ரூ.1 கோடியே 44 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. R.D. சேகர் அவர்கள்.

திரு. R.D. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் பல்வேறு திட்டப் பணிகளுக்கு அனுமதி அளித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், துறையின்

2022 மார்ச் 21]

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பில் வரவேற்பையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எனது பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியில், உதயசூரியன் நகர் திட்டப் பகுதியில் 35 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட 684 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மிகவும் சேதமடைந்து மக்கள் வாழ்வதற்குத் தகுதியில்லாத நிலையில் உள்ளன. ஆகவே, அவற்றை இடித்துவிட்டு மறுகட்டுமானம் செய்து தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதயசூரியன் நகர் திட்டப் பகுதியினை தொழில்நுட்ப வல்லுநர் குழு ஆய்வு செய்து, தற்போது மறுகட்டுமானம் தேவையில்லை என தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து, பழுதுநீக்கும் பணியினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இருந்தபோதிலும், சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைக் கருத்தில் கொண்டு, சிறப்புக் குழுவின்மூலம் மறுஆய்வு செய்து, அங்குள்ள குடியிருப்புகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன என்று சான்று அளித்தால், அங்கு மறுகட்டுமானம் செய்வதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. R.D. சேகர் அவர்கள்.*

திரு. R.D. சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியில் சிதிலமடைந்த குடியிருப்புகளை இடித்துவிட்டு, மறுகட்டுமானம் செய்யும்போது கிடைக்கின்ற அதிகப்படியான குடியிருப்புகளை அதே தொகுதியில் வசித்துவரும், பொருளாதாரத்தில் நலிவுற்ற, ஏழை, எளிய குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதிலமடைந்த குடியிருப்புகளை இடித்துவிட்டு மறுகட்டுமானம் செய்யும்போது கிடைக்கும் அதிகப்படியான குடியிருப்புகளை, ஆண்டு வருமானம் ரூ.3 இலட்சத்திற்குட்பட்டு, வேறு எங்கும் சொந்தமாக வீடு இல்லாத, பொருளாதாரத்தில் நலிவுற்ற, இதே பகுதியைச் சார்ந்த குடும்பங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின்படி, பயனாளிகளின் பங்களிப்பு செலுத்த முன்வருபவர்களுக்கு அந்த வீடுகள் ஒதுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் அவர்கள்.

டாக்டர் நா. எழிலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுடன் கலந்தாய்வு செய்து, திட்டங்களைத் தீட்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குடிசை குடியிருப்புகள் அதிகமாக இருக்கும் தொகுதி ஆயிரம் விளக்கு தொகுதிதான். ஆயிரம் விளக்கு தொகுதியில் குடிசைகளில் குடியிருப்பவர்களுக்கு சுய மரியாதையை அளித்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1970-களில் குடிசை மாற்று வாரியம்மூலம் வீடு கட்டிக் கொடுத்தார். 1990-களில் கிட்டத்தட்ட அதில் பாதி வீடுகளை நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் கட்டித் தந்தார்கள். முத்தமிழறிஞர் அவர்கள் கட்டித் தந்த வீடுகள் கட்டப்பட்டு 50 வருடங்களாகிவிட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கட்டித் தந்த குடியிருப்புகள், கட்டப்பட்டு 30 ஆண்டுகளாகிவிட்டன. தற்போது, குடிசை மாற்று வாரியத்தை, நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெயர் மாற்றம் செய்திருக்கிறார்கள். அதன்மூலம் குடிசைவாழ் மக்களுக்கு சுயமரியாதை அளித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது தியாகராய நகரில் உள்ள தாமஸ் சாலை முதல் தொகுப்புக்கு மட்டுமே புதிய கட்டடம் கட்டித் தரப்படும் என்று அறிவிப்பு வந்துள்ளது. தாமஸ் சாலை இரண்டாம் தொகுப்பு, மூன்றாம் தொகுப்பு, நான்காம் தொகுப்பு

2022 மார்ச் 21]

என்ற மற்ற மூன்று தொகுப்புகளுக்கும் புதியதாகக் கட்டடம் கட்டுவதற்கு திட்டம் ஏதும் இருக்கிறதா என்ற கேள்வியை இந்த அவைமுன் வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதற்கிணங்க, நம்முடைய இதயங்களில் இன்றைக்கும் வாழ்ந்துகொண்டிருக்கின்ற ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் ஏழை, எளிய மக்கள் குடிசைகளில் வாழக் கூடாது, அவர்களும் கான்கிரீட் வீடுகளில் வாழ வேண்டும் என்பதற்காக 1970 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதுதான் இந்த வாரியம். 40 ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்டப்பட்ட கட்டடங்களெல்லாம் இன்றைக்கு மக்கள் வாழ்வதற்கு சரியில்லாத வீடுகளாக இருக்கின்றன. இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, வல்லுநர் குழு மூலமாக அங்கு ஆய்வு செய்யப்பட்டது. சென்னை மாவட்டம் முழுவதிலும், 27,056 வீடுகள் மிகவும் மோசமான, மக்கள் வாழ்வதற்குத் தகுதியில்லாத வீடுகள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதர மாவட்டங்களில் 3,652 வீடுகள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறோம். இவற்றை படிப்படியாக அப்புறப்படுத்திவிட்டு, அந்தப் பகுதியில் வாழக்கூடிய மக்களுக்கே அந்தப் புதிய வீடுகளைக் கட்டித் தர வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். கடந்த நிதி ஆண்டில் 7,500 வீடுகள் கட்டுவதற்கு ரூ.1,600 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டிலும் 7,500 வீடுகளைக் கட்டுவதற்காக எடுக்கவிருக்கிறோம். படிப்படியாக 4 ஆண்டுகளில், சேதமடைந்து, மக்கள் வாழத் தகுதியற்ற வீடுகளையெல்லாம் இடித்துவிட்டு, முழுவதுமாக அந்த மக்களுக்கு அரசு சார்பில் வீடுகள் கட்டித் தரப்படும் என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*